REGD No. M. 4642

திராவிடநாடு

இலங்கை 15 சதம்   விலை அணா 2

மலர் 9 | 11—2—51 | இதழ் 34

★ "குற்றம் சொல்கிறார்கள்!" ★

C N. A.

காங்கிரசே தேசம்!

தேசமே, காங்கிரஸ்!

*   *   *

காங்கிரஸ் ஆட்சி ஏற்பட்டால்தான் மக்களுக்குச் சுகவாழ்வு கிடைக்கும்.

x   x   x

நாட்டை மீட்ட காங்கிரசுக்குத்தான் நாடாளும் திறமையும் உரிமையும் உண்டு.

x   x   x

காங்கிரஸ் என்பது கங்கை! சாக்கடைத் தண்ணீர்வந்து கலந்தால்கூட காங்கிரஸ்கங்கை கெட்டுவிடாது! மாறாக, சாக்கடைத் தண்ணீர் பரிசுத்தமாகிவிடும்.

x   x   x

சுயநலம், ஊழல், பதவிச் சண்டை போன்றவைகள் தீண்ட முடியாத திருச்சபை, காங்கிரஸ் ஒன்றுதான்.

x   x   x

காங்கிரசால்தான் நாட்டிலே நல்லாட்சி அமைக்கமுடியும் — மக்களுக்குத் தேவையான எல்லாக் காரியங்களையும் செய்யமுடியும்.

x   x   x

இவ்விதமாகவெல்லாம் பெருமையாகவும் பூரிப்புடனும் பேசினர் — புகழ்பாடினர்.

மற்றகட்சிகளிலெல்லாம் ஊழலும் பதவிச்சண்டையும், பொறாமையும் பகையும் மூண்டுவிடுகின்றன—காங்கிரசிலேமட்டும், இப்படிப்பட்ட நோய் புகவேமுடியாது, ஏனெனில் காங்கிரஸ் என்பது ஓர் புனித ஸ்தாபனம் என்று மார்தட்டிக் கூறினர். அசைக்கமுடியாத அமைப்பு எமது காங்கிரஸ் என்று ஆர்ப்பரித்தனர்—அன்று!

இன்று காங்கிரஸ் இருக்கிறதா, இறந்துபட்டதா?

காங்கிரஸ் கலகலத்துப்போய்விட்டது.

காங்கிரஸ் கரைந்துபோகிறது.

காங்கிரசைக் கலைத்து விடுவதா, நடத்திச் செல்வதா?

காங்கிரஸ் பிழைக்குமா செத்தே போகுமா?

காங்கிரசுக்குப் புது இரத்தம் புகுத்தவேண்டும்.

> **தஞ்சை மாவட்ட**
> [illegible]
> **மாநாடு**
> **மார்ச்சு 3, 4, தேதிகளில்**
> **மாயவரத்தில்!**

இன்று இவ்விதமாகப் பேசுகிறார்கள்.

அடிக்கடி தலைவர்கள் கூடுகிறார்கள்—காங்கிரசின் கதியைக் கணிக்க.

ஒவ்வொரு தலைவர் ஒவ்வொரு வகையான 'வைத்தியமுறை' கூறுகிறார்—வைத்தியர்களுக்குள்ளாகவே, தகராறு கிளம்பிவிடுகிறது.

காங்கிரசைக் குணப்படுத்துவதற்காக எடுத்துக்கொள்ளப்படும் ஒவ்வொரு முயற்சியும்' புதிய சிக்கலையும் பிளவையும் ஏற்படுத்துகிறது—காங்கிரஸ் குணப்படுவதாகக் காணோம்.

அன்று ஆர்ப்பரிப்பு! இன்று அழுகுரல்' அன்று ஏறுநடை — இன்று தடுமாற்றம்.

அன்று அகமும் முகமும்மலர்ந்த நிலையில், கேண்மினோ, கேண்மினோ, காங்கிரசின் மகத்தான சக்தியைப் பார்மினோ! — என்று பண்பாடி, பொப்பிலி காங்கிரசில் சேர்ந்துவிட்டார், பித்தாபுரம்காங்கிரசில்புகுந்துவிட்டார், வடபாதிமங்கலம் வந்து சேர்ந்தார், தளவாய் குடும்பமும் சேர்ந்துவிட்டது, இலஞ்சியார்வந்துவிட்டார், — என்று பெருமிதத்துடன்பேசினர். இன்று! ஈனகட்டி இருமி, குரல் நடுக்குற்ற நிலையில் இருப்பவன், எதை எதையோ எண்ணி ஏங்குவதுபோல ஆகிவிட்டனர்.

புது இரத்தம் வேண்டுமாம்!

காங்கிரஸ் புனிதமான ஸ்தாபனம்—ஆனால் அதிலே புதிது புதிதாக சுயநலக்காரர்கள் புகுந்துவிட்டதால், அந்த மகத்தான ஸ்தாபனம் கெட்டுவிட்டது — கலகலத்துவிட்டது — கடைசி கட்டத்திலே நிற்கிறது என்று ஏக்கத்துடன் பேசுகின்றனர்.

* * *

காங்கிரஸ் 'போராட்டத்'தில் ஈடுபட்டிருந்தவரையில், கட்டுப்பாடும் ஒற்றுமையும் நிரம்ப இருந்தது — போராட்டம் முடிந்ததும் பிளவும் பேதமும் அதிகமாகிவிட்டன.

* * *

பொதுமக்கள் கண்டு பிரமிக்கத் தக்கவிதமாகத் தியாகம்புரிந்த காங்கிரசார், இன்று, அந்தத் தியாகத்தைக் காரணம் காட்டி, பதவிகள், சலுகைகள், கேட்டு ஸ்தாபனத்துக்கு கெட்ட பெயர் ஏற்படுத்திவிட்டனர்.

X X X

காங்கிரஸ் பேரால் சிலர்மட்டுமே மந்திரிகள் ஆகமுடியும், சட்டசபை செல்லமுடியும் — எல்லாக் காங்கிரசாரும பதவி பெறமுடியாது. இதை உணராமல், பதவிகிடைக்கப்பெறாத காங்கிரஸ்காரர்கள், அந்தக்காரணத்தால், ஒதுங்கியிருப்பதும், வெதும்பிக்கிடப்பதும், வேற்றுமை காட்டுவதுமாக நடந்துகொள்வதனால், காங்கிரஸ் ஸ்தாபனம சீரழிந்துவிட்டது.

X X X

பெரிய தலைவர்கள், தேச நிர்வாகப் பொறுப்பிலே ஈடுபட்டுவிட்டதால், காங்கிரஸ் ஸ்தாபனத்தை வலிவுடையதாக நடத்திச் செல்ல, தக்க தலைவர்கள் கிடைக்கவில்லை— அதனால் காங்கிரஸ் ஸ்தாபனம் சீரழிகிறது.

காங்கிரசில் ஈடுபட்டிருந்த பல்லாயிரக் கணக்கான தொண்டர்கள், யாரோ ஒரு சில காங்கிரஸ் தலைவர்கள் பதவியில் அமர்ந்துவிட்டது கண்டு, சலிப்பும் வெறுப்பும் கொண்டவர்களாகி, நாட்டுக்குப் பணி புரிவதை விட்டுவிட்டார்கள். இதனால் காங்கிரசுக்கு இருந்து வந்த, 'உயிர்' சிதைந்துவிட்டது.

X X X

காங்கிரசின் பேரால் பதவிபெற்று ஆட்சியை நடத்தும் பெரிய தலைவர்கள், பொதுமக்களின் தொடர்பையும், காங்கிரஸ் ஊழியர்களின் தொடர்பையும் அறுத்துக்கொண்டனர், அதனால் காங்கிரஸ் ஸ்தாபனம், தொண்டர்களாலும், பொது மக்களாலும் வெறுக்கப்படும் ஸ்தாபனமாகிவிட்டது.

X X X

பெர்மிட், லைசென்சு போன்றவைகளைப் பெறுவதற்காக, மந்திரிகளின் மாளிகைகளிலே சுற்றிக்கொண்டிருப்பதும், சர்க்கார் காரியாலயத்தைச் சுற்றிவட்டமிடுவதுமே, பெரும்பாலான காங்கிரசாரின் அன்றாட வேலையாகிவிட்டது.

X X X

பொதுவாகவே காங்கிரசார், இப்போதைய ஆட்சியை, தங்கள் "அறுவடை" என்று கருதுகிறார்கள்.

X X X

இவ்விதம் பலர் பேசுகின்றனர் காங்கிரஸ் வட்டாரத்திலேயே.

கோபம், கொதிப்பு, சோகம் துடிப்பு—இவ்விதம் பல்வேறு வகையான உணர்ச்சி தொனிக்கிறது அந்த உரைகளிலே

சிலர் சீற்றத்துடன் வெளிப்படையாகவே பேசுகின்றனர்.

மற்றும் சிலர், மனதிலே ஏற்பட்ட குமுறலை மறைக்க அரும்பாடுபட்டு அவதிக்காளாகின்றனர்.

இன்னும் சிலர், எம்மால் ஆகாது—என்று கூறி விலகுகின்றனர்.

துடிப்புள்ள சிலர், கறையைப் போக்கியே தீருவோம் என்று கங்கணம் கட்டிக்கொள்கின்றனர்—கட்டிய கங்கணம் கரத்தை இறுக்குவதன்றி வேறு பலன் காணாது திகைக்கின்றனர்.

வேறு சிலர், வெளியேறி, காங்கிரசின் உண்மைக் கொள்கையின்படி ஊருக்குப் பணிபுரியப் போகிறோம் என்று உரைக்கின்றனர்.

அதே காரியத்தைக் காங்கிரசக்கு உள்ளிருந்தே நாங்கள் செய்யப் போகிறோம் என்று பேசுகின்றனர் மற்றும் சிலர்.

ஆக, மருத்துவர்களின் தொகை வளருகிறது, நோயாளியின் நிலைமையோ, மோசமாகிக் கொண்டே வருகிறது.

"இவ்விதமாகவே காங்கிரசின் நிலைமை நீடிக்குமானால் நாம், சின சியாங்க் அடைந்த கதியைத்தான் அடைவோம்" என்று கிருபளானி கூறிவிட்டார், ஆமதாபாத்தில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில்.

அன்று அங்கு, பெரிய பெரிய தலைவர்கள், சாதாரணத் தலைவர்களைக் குறை கூறி, உபதேசம செய்தனர் — சாதாரணத் தலைவர்களும் சும்மா இல்லை, அவர்கள் பெரிய தலைவர்களைக் குறை கூறினார்கள்.

மொத்தத்திலே குடும்ப நிலைமை கோளாறாகிவிட்டது என்பது மட்டுமல்ல, மூத்தவர்களுக்கும் இளையவர்களுக்கும் இடையே, சச்சரவும கிலேசமும் [illegible]விட்டிருப்பதையும் அன்றையக் கூட்டம் நன்றாக எடுத்துக் காட்டிற்று

இவ்வளவு வெளிப்படையாக விஷயம் தெரிந்துவிட்டதே, இனி ஊரார் கேலி பேசாமலா இருக்கப் போகிறார்கள் என்ற எண்ணத்தால தாக்கப்பட்ட 'தினசரி' இதழ், 'எதிர்கள் கும்மாளமடிக்கக் கூடும்" என்று தீட்டிவிட்டது.

ஜவஹர்லால நேருவின் புகழொளி ஒன்று தவிர இன்று காங்கிரசுக்கு

பேச்சுரிமைப்போர்

சென்னையில்

ஜனவரி 31 அன்று

—

கார்ப்பரேஷன் கவுன்சிலர்

என். ஜீவரத்தினம்

பன்மொழிப் புலவர்

கா. அப்பாதுரை

தடையுத்தரவு மீறினர்

—

வழக்கு தொடர்ந்துள்ளனர்

ஆட்சியாளர்!

காந்திக் குல்லாய் அல்ல; மூளை தேவை!

வெளிச்சம் தர, வேறு கருவியே இருப்பதாகத் தெரியவில்லை. ஆகவேதான் அவர், அனைவருக்கும் அறிவு புகட்டும் ஆசானாக ஆமதாபாத் கூட்டத்திலே காணப்பட்டார்; கட்டவர்த்தனமாகவே பேசிவிட்டார்.

X X

காங்ரசார் காங்கிரசின் இலட்சியங்களை மறந்து விட்டார்கள்.

அற்ப விஷயங்களில் ஈடுபட்டு அரட்டை அடிக்கிறார்கள்.

நேருவின் பலமான குற்றச்சாட்டுகள் இவை! யாருக்குக் கோபம் வந்தாலும் கவலையில்லை, தன்னை எதிர்க்கும் ஆண்மகன் எவனும் அங்கு இருக்க முடியாது என்ற எண்ணத்துடன் ஜவஹர்லால் அன்று, "காந்தித் தொப்பி அல்ல முக்யம்—மூளைதான் முக்கியம்; அப்படிப்பட்டவர்கள் தான் எனக்கு வேண்டும்' —என்று பேசிவிட்டார்.

அந்த அளவுக்கு அவருக்கு அருவருப்பு ஏற்பட்டுவிட்டது, காங்கிரசாரின் போக்கில்; அன்று அங்கு கூடியிருந்தவர்களுக்கும் அவ்வளவு சுரீலென சவுக்கடி கிடைத்ததுபட, பதில் பேசமுடியாத அளவுக்கு பீதி ஏற்பட்டிருக்கிறது.

மூளை உள்ளவர்கள் வேண்டும், இதோ பார், காந்திக் குல்லாய் என்று காட்டினால் போதாது—என்று பேசுகிறார் பெரியவர், 'சின்னதுகள்' என்ன செய்வது, ஏதோ இந்த வாழ்வாவது நமக்குக் கிடைத்திருப்பது நேரு மகானுடைய தயவினால்தானே என்று எண்ணி ஏக்கமடைந்திருப்பர்.

நேரடியாகப் பதில் கூறுமளவுக்குத் துணிவு இல்லையானாலும், "அதிகமாகப் பேசாதீர் நேருவே! இப்படித்தான் சகாக்களைக் கூட துச்சமாகக் கருதிப் பேசினான் சீன சியாங்! அந்தச் சீனனின் கதை கவனமிருக்கட்டும்" என்று மறைமுகமாக இடித்துக் காட்டினார் கிருபளானி.

நாடு விடுதலை பெற்றதும், புதியதோர் சமூக, பொருளாதார அமைப்பு ஏற்பட வேண்டும் என்பதுதான், மக்கள் எதிர்பார்ப்பது.

வெள்ளைக்காரன் ஆண்டதால் சம்பளமாகவும், வியாபார மூலமும் சீமைக்குச் செல்வத்தைக் கொள்ளை கொண்டு போனது மட்டுமல்ல, நாட்டுக்கு ஏற்பட்ட கேடு, சுரண்டல்காரர்களையும் சூழ்ச்சிக் காரர்களையும், ஆதிக்கம் செலுத்தும் விதமான முறையில் வாழவைத்ததுதான் பெரியகேடு. உழுத்தர்கள் வாழ்வதற்கான அமைப்பு ஏற்பட்டு விட்டது. பொது மக்கள் புதிய ஆட்சியால் பயன்பெற வேண்டுமானால், இந்தச் சுரண்டல் அமைப்பு, சுகபோகிகள் சூதறியாத மக்களின் அறிவையும் உழைப்பையும் சூறையாடும் அமைப்பு, ஒழிக்கப்படவேண்டும் — "புதியதோர் உலகு சூாண்போம்" —என்ற பாடலின் கருத்து இதுவே.

இந்த அமைப்பை—இன்று உள்ள அமைப்பை மாற்றுவது என்றால் சிலருக்கு வெறுப்பு மற்றும் சிலருக்குப் பயம், மேலும் சிலருக்குத் தயக்கம் இடர்தரும் இன்றைய அமைப்பை மாற்றுதிருப்போர் ஒரு சாரார்—மாற்றியாக வேண்டும் என்பவர் வேறோர் சாரார்.

கிருபளானி, உணர்ச்சி மிகுந்து அன்று "இன்றைய அமைப்பை அப்படியே வைத்திருக்க வேண்டும் என்ற நோக்கம் கொண்டவர்கள் அதிகார நிழலுக்கடியே பதுங்கிக் கொண்டு விட்டனர்." என்று பேசினார்.

அதாவது சூழ்ச்சிக்காரர் சுரண்டல்காரர்கள் கொண்ட அமைப்பைக் காப்பாற்றுபவர்களே அதிகாரத்தில் அமர்ந்துள்ளனர் என்று கூறுகிறார்.

பச்சையாகக் கூறுவதானால் "சூழ்ச்சிக்காரர்களுக்கும், சுரண்டல்காரர்களுக்கும் இடமளித்து விட்டீர், நேருவே!"—என்று குற்றம் சாட்டுகிறார் என்றுதான் அவர் பேச்சுக்குப் பொருள்.

அவ்வளவுடன் நின்றாரில்லை "இன்றைய அமைப்பை அப்படியே இருக்க விட்டோமானால், ரஷியநாட்டிலே கெரன்ஸ்கி, சீனா நாட்டிலே சியாங் ஆகியோருக்கு நேரிட்ட கதிதான் நமக்கும் என்று கூறிவிட்டார்.

காங்கிரஸ் கட்சியின் போக்கையும் அதன் தலைவர்களின் நடவடிக்கைகளையும் கண்டு வெகுண்ட எதிர்க்கட்சிகள் மட்டுமேதான், இதுவரை இப்படி எச்சரிக்கைச் செய்திருக்கின்றன.

ஆமதாபாத்தில் ஆச்சார்ய கிருபளானியே அபாயச்சங்கு ஊதிவிட்டார், நேருவின் எதிரில்!

காங்கிரசைத் தூய்மைப் படுத்த வேண்டும், என்பது பற்றி அனைவரும் வற்புறுத்தினர். எப்படி என்பது பற்றி எவரும் பேசவில்லை. என்ன பேசுவார்கள்; பாபம்! யார், யார் மீது குறை கூறுவது!

அந்தப் பழயபொலிவு காணோமே என்று ஏங்கும் வயோதிகச் சீமாட்டி போலாகிவிட்டது காங்கிரஸ்.

பழய பொலிவும் வலிவும் மீண்டும் பெற்றாகவேண்டும் என்று நேரு வற்புறுத்திக் கூறினார். எவ்விதம் பெறுவது என்று கூறவில்லை—ஏன் பழய பொலிவும் வலிவும் போய்விட்டது என்பது பற்றிய ஆராய்ச்சியும் நடைபெறவில்லை — தெரியாததால் அல்ல—அந்த ஆராய்ச்சி பலப்பலவற்றை அம்பலத்துக்குக் கொண்டு வந்துவிடுமே என்ற அச்சத்தினால்.

காங்கிரஸ் மீண்டும் சிறப்புறப் பாகப் பணியாற்ற வேண்டுமானால், புதிய இரத்தம் காங்கிரஸ் உடலில் புகுத்தப்பட வேண்டும் என்று நேரு யோசனை கூறினார். ஆனால் பழய இரத்தம் எதனால் கெட்டுவிட்டது—என்பது பற்றி யோசிக்க மறந்து விட்டனர்.

(9–ம் பக்கம் பார்க்க)

சேலம் நேசவாளர்
அறப்போர்
வெற்றிகரமாய் நடைபெறுகிறது.
7—2—51

தி. மு. க. பொதுக் குழு

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழுக் கூட்டம் 11—3—51 ஞாயிற்றுக் கிழமை காஞ்சியில் நடைபெற ஏற்பாடாகி வருகிறது.

சி. என். அண்ணாதுரை

திராவிட நாடு

ஞாயிறு] 11—2—51 [காஞ்சி

விபரீதப் பாதை

ஆதிக்க வெறி! — இந்தப் பாதையில் சென்றோர், வீழ்ச்சியைக் கண்டதாகச் சரித்திரம் சாற்றுகிறது.

மக்களின் அதிருப்திப் புயல் முன், ஆதிக்கக்காரர்களின் ஆணவமும், வீண் கர்வமும் பட்டழிந்தனவே யன்றி, துளிர்த்ததில்லை.

இந்த, உண்மையை, நன்கு தெரிந்தவர்கள் காங்கிரஸ் கட்சியினர் என்று நம்பியிருந்தோம்—ஏனெனில், வெள்ளை ஆதிபத்தியத்தின் அஸ்தமிப்பைத் தங்கள் கண்ணுக்கெதிரே கண்டவர்கள் அவர்கள் என்பதால்.

ஆனல், ஆட்சிப் பீடத்தில் அமர்ந்தது முதல் அவர்கள் நடந்து செல்லும் பாதையைக் காணும்போது, அந்த உண்மையை உணராதவர்கள் மட்டுமல்ல; உன்மத்தப் பாதையில் உருண்டு சென்று சரிந்த அரசுகளின் பட்டியலில் தங்களது ஆட்சிக் காலத்தையும் பொறித்துக் கொள்வார்களென்றே தோன்றுகிறது.

தடியடியும் துப்பாக்கியும்—நல்லாட்சியில் தேவைப்படா. அன்பும் அதனல் வரும் அமைதியும் தான், அவர்கள் ஆட்சியை நடாத்திச் செல்லுமே யொழிய அட்டகாசமும் ஆவேச வெறியும் அவர்கள் மத்தியில் மலராது; மணக்காது.

ஆனல் இங்கோ! நல்லாட்சி என்ற அறிகுறி இல்லாதது மட்டுமல்ல; பொல்லாத ஆட்சி, என்ற "புகழை"யும் அதிகரித்துக்கொண்டே யிருக்கிறது, காங்கிரஸ் ஆட்சி.

மக்களைத் தடியடியால் தாக்குவதும், துப்பாக்கிகளால் மிரட்டுவதும், தங்களது அதிகார அம்புகளை ஏவி, விரட்டுவதுமாக விபரீதப் பாதையில் இவர்கள் செல்லும் வேகத்தைக் காணும்போது வேதனையும் சிரிப்பும் கலந்து, வருகிறது, நமக்கு.

பகலைப் பாம்பு என்று கருதுவோனை 'பார்வை பழுதானவன்' என்று சொல்வார்கள்.

பாதை வழியே செல்பவன்மீது பாய்ந்து தாக்குபவனை 'வெறியன்' என்று அழைப்பார்கள்.

மல்லிகைத் தோட்டத்துள் புகுந்து மலரையும் செடிகளையும் மிதித்துக் குதிப்பவனைக் கண்டால், "பைத்யம்! பைத்யம்!!" என்று கூறத் தோன்றும்.

'இந்த ரகத்தில் எந்த ரகமோ இவர்கள்!' என்று, கண்டுபிடிக்க முடியவில்லை நம்மால்.

வீண் கர்வத்தோடு திரிவதும், வீம்பை விலைக்கு வாங்குவதும், கனியை விஷம் எனக்கருதுவதும், விபரீதத்தையும் விபத்தையுமே தரும்.

நிலவை, நெருப்பெனக் கருதிக்கொண்டு குதித்துக் கூத்தாடுகின்றனர்! கையில் அதிகாரம் இருக்கும் காரணத்தால் மனம்போன போக்கில் தங்களது அதிகார அம்புகளின் மூலம், அடாது செய்கிறார்கள்—'அடக்குமுறை' அடக்குமுறை!! என்று ஆணவத் தர்பார், நடத்துகிறார்கள்.

* * *

என். வி. நடராசன்

கே. கோவிந்தசாமி

வி. முனுசாமி

ரத்தினம்

நமது கழகக் கண்மணிகளான, இந்நால்வரும், சிறையிலே வாடுகிறார்கள்! சென்னைச் சிறை, இந்தச் சிங்கங்கள், உலவுமிடமாகி யிருக்கிறது.

தோழர் என். வி. நடராசன்—திராவிட முன்னேற்றக் கழகத்தின் அமைப்பாளர். 'திராவிடன்' வார இதழின் ஆசிரியர். பொறுப்புள்ளவர்—அவரது புன்னகையும், பொதுப் பணியில் காங்கிரசிலிருந்த நாள் முதல் இன்றுவரை அவர் கொண்டுழைக்கும் ஆர்வமும், மக்கள் மத்தியிலே அவரை மாவீரனாக ஆக்கியிருக்கின்றன! அந்த மாணிக்கத்தைச் சிறையிலே போட்டிருக்கின்றனர்.

தோழர் கே. கோவிந்தசாமி—சென்னை மாவட்டத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயலாளர், அவரது உருவம் அன்பின் சிகரம்! பிறர் மனதுக்குச் சிறிது சங்கடம் ஏற்பட்டாலும் துவண்டுவிடும் சுபாவம் அவருடையது. கண்ணியம்—நேர்மை இவையிரண்டுமே, அவருடைய கண்கள். அத்தகைய சாத்வீக வீரரையும் தள்ளிப் பூட்டியிருக்கின்றனர்!

தோழர் வி. முனுசாமி—சென்னை கார்ப்பரேஷனின் கவுன்சிலர். சென்னை மக்களால் தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்டவர். அதிலும் பலமும் சக்தியும் வாய்ந்த 'பழம்புலி'யாம் ஒரு காங்கிரஸ்காரரை எதிர்த்து வெற்றிகண்ட வீரர் அவர்! எப்போதும், ஏதாவது தன்னால் செய்ய முடியுமா பொதுமக்களுக்கு, என்ற ஆர்வத்தோடு, பணிபுரிபவர். அவரையும் நெஞ்சிலே உரமும், நேர்மைத் திறனும் கொண்ட நமது கழகக்காளையான தோழர் ரெத்தினத்தையும், கொண்டுபோய்ப் பூட்டிவைத்திருக்கிறது, இந்த ஆட்சி.

பொறுப்பானவர்களைக் கொண்டு போய்ப் பூட்டிவைத்திருக்கிறது!

தீரர்கள் —சிறையிலே கிடக்கின்றனர்.

பொறுப்புள்ள, பொதுமக்களின் தொண்டர்கள், பூட்டப்பட்டு விட்டனர், சிறைக்குள்.

மாகாண அமைப்பாளர்,

சென்னைச் செயலாளர்;

சென்னை நகரப் பிதா,—

ஆகியோரை, காராக்கிரகத்திலே தள்ளிவைத்திருக்கிறது, காங்கிரஸ் ஆட்சி.

அரசாங்கத்தைக் கவிழ்க்க இவர்கள் சதிசெய்யவில்லை, இப்போதிருக்கும் சர்க்காரை மாற்றிவிட்டு வேறு சர்க்கார் அமைக்கப் புறப்படவில்லை—அமைதியான முறையில், தங்கள் அதிருப்தியைக் காட்டச் சென்றார்கள்!

(12-ம் பக்கம் பார்க்க)

திருக்குறள்
மாநாடு
திருவண்ணாமலையில்
மார்ச்சு 24, 25 தேதிகளில்!

சரிதம் தழுவியது

திரை

தில்லை. வில்லாளன்

காட்சி 1

இடம்:- ராஜா தேசிங்கின் தனி மண்டபம்.

இருப்போர்:- தேசிங் ராஜன், சோதிடர் பையராம கிருஷ்ணய்யா.

தேசிங்:- பார்க்கக் கூடாதா...?

பைய:- ஒரு நாள், இருநாளல்ல, மூன்றாண்டுகள்!

தே:- என் ஆருயிர் மனைவி ராணியை நான் பார்க்கக் கூடாது—அதுவும் மூன்றாண்டுகள்......பார்த்தால்......?

பை:- நாடு நாசமாகும்.

தே:- மனைவியைக் கணவன் பார்த்தால் பாதகம் விளையுமா?

பை:- ராஜன் நீங்கள், சாதாரண குடிமகனல்லவே!

தே.- ராஜனாக இருப்பதால், நான் இந்த விசித்திர தண்டனையை அனுபவிக்க வேண்டுமா? சோதிடரே, உம் பேச்சைக் கேட்க என் நெஞ்சு குமுறுகிறது!

பை:- கேட்டதால் உங்கள் நெஞ்சு குமுறுவது மட்டுமல்ல, சொல்லும் பொழுது என் நா குளறுகிறது! என் செய்வது? சாத்திரம் சாற்றுவது அது—விதி விதிக்கும் வழி—வேதம் காட்டும் பாதை!

தே:- நல்ல சாத்திரம், நல்ல விதி; நல்ல வேதம் — நாதனை நாயகியிடமிருந்து பிரிக்கிறது!

பை:- வீண் விவாதம் கூடாது, ராஜன், இந்த விஷயத்தில்—அதுவே மகாபாவம்! செஞ்சிக் கோட்டைக்கு சேதம் வரவேண்டுமானால், செய்யுங்கள் விருப்பம் போல்—என் சொல்லை மீறுங்கள்.

தே:- சோதிடரே, வீண் மிரட்டல் வேண்டாம். விளக்கமாகச் சொல்லுங்கள்.

சோ:- ராம, ராம...! மிரட்டலா, மன்னா, தவறு, தவறு தங்கள் பேச்சு! சாத்திர நெறிப்படி, தங்கள் எதிர்காலத்தைக் கணித்துப் பார்த்தேன்—சாதகம் கூறியதை சாற்றினேன் அவ்வளவுதான்.

தே:- என்ன கூறுகிறது?

சோ:- தாங்கள், தங்கள் மனைவியாரை இன்னும் மூன்றாண்டுகள் பார்க்கவே கூடாது. பார்த்தால், நாட்டின் நல்வாழ்வு நசித்துவிடும். குடிமக்கள் வறுமையால் வாடுவர். வயல்கள் வளமிழந்துவிடும். ஆறுகள் வற்றிவிடும்—பஞ்சம் வரும், அந்நியர் படையும் வரும்!

தே:- ஆ.........

பை:- பொய்யில்லை மன்னா, தங்கள் சாதகம் பேசுகிறது.

தே:- ஆகவே, என் அன்புச்சிலை, அழகு மனைவி, ராணியை நான் பார்க்கக்கூடாது!

பை:- பார்க்கவே கூடாது!

காட்சி 2.

இடம்:- தேசிங்கு மனைவி ராணியின் அந்தப்புரம்

இருப்போர்:- ராணி, அவள் தோழி

ராணி:- பார்க்க வேண்டுமடி, அவரை, உடனே—போயேன்.

தோ:- அவசரம் வேண்டாம், அம்மா, அவர் வரும் நேரந்தான் இது!

ரா:- அந்தி வந்தும் அவர் வரவில்லையே—என் இதயம் இந்த தாமதத்தை தாங்காது!

தோ:- அம்மாடி, இத்தனை தவிப்பு கூடாது! அவரென்ன, நம்மைப்போல, அந்தப்புரத்திலேயே அடங்கிக்கிடப்பவரா? — ஆயிரம் வேலைகள் — பாராள்வது என்பதென்ன, பட்டாடை யுடுத்தி, பரிமளகந்தம் பூசி, வீணாகாதம்எழுப்பி, குயில் குரலால் பாடி, மயில்போல ஆடி, கயல்போல கண்களைப் புரட்டிடும் காரியமா? கொலுமண்டபத்திலே எத்தனை கோணல் வழக்குகள் —சிக்கல் நிறைந்த அரசியல் குழப்பங்கள்—அமைச்சரின் உபதேசங்கள்—மற்ற பிரதானியரின் காரியங்கள்—அப்பப்பா!

ரா:- எனக்கும் தெரியுமடி—இவை மட்டுமல்ல, இன்னும்பல! படையை பார்ப்பது—பாசறை போவது—நகர் வலம் வருவது—நகர் சோதனை போவது—எல்லாம் உண்டு. இவைகளுக்கு மேலாக என்னைப் பார்ப்பது என்றுதானே நான் சொல்கிறேன்.

[யாரோ வரும் காலடியோசை கேட்கிறது. தோழி சைகையாலே 'அவர் வருகிறார்' என்று கூறுகிறாள்]

தே:- பார்க்க முடியாது ராணி! இனி மூன்றாண்டுகள் உன் முகத்திலேயே விழிக்க முடியாது!

[எதிரிலிருந்த திரையை விலக்கிக்கொண்டு அவள் வர முற்படுகிறாள். அதனைத் தடுத்து......]

ராணி:- திரையை விலக்காதே—உனக்கும் எனக்கும் இடையில் இந்தத்திரை இருக்கத்தான் வேண்டுமாம்—சோதிடர் சொல்கிறார்—சாத்திரம் அப்படிச் சாதிக்கிறதாம்!

ரா:- ஐயோ, சாத்திரம் காதலர்களிடையிலே, திரையிடுகிறதா? விந்தையாயிருக்கிறது நாதா!.

தே:- விந்தை மட்டுமல்ல, ராணி—விபரீதமாகக்கூட இருக்கிறது...என் செய்வது?

ரா:- நாதா, இதை நீங்கள் நம்புகிறீர்களா?

தே:- நான் நம்புகிறேனோ, இல்லையோ, நாடு நம்புகிறது—ஆகவே நாம் நம்பி, அதன்படி நடக்க வேண்டும்.

ரா:- ஏன்?

தே:- நான் இந்நாட்டின் நாயகனாக இருப்பதால்......

ரா:- மன்னனாக இருப்பதால், மௌடீக எண்ணங்களுக்கு மண்டியிடத்தான் வேண்டுமா? மனைவியைப் பார்க்காதே என்று கூறுமாம் சாத்திரம் அதைநம்பத்தான் வேண்டுமா? மதியுள்ளோர் எள்ளி நகையாடுவர் நாதா.

தே:- இல்லை, ராணி--யோசித்த பிறகு, திரை போடத் தீர்மானித்து விட்டேன். என்னை மன்னித்துவிடு- மூன்றாண்டுகள், நாட்டிற்காக, உன் காதலுக்காக இந்தக்கொடிய தண்டனையை அனுபவிக்கத்தான் வேண்டும்.

[கூறிக்கொண்டே நடந்து விடுகிறான். திரை வழியே அவன் திரும்பிச் செல்லும் காட்சி தெரிகிறது]

ரா:- நாதா......

[அப்படியே பஞ்சணையின் மேல் விழுந்து பொருமுகிறாள். தோழி வந்து தேற்றுகிறாள்]

காட்சி 3.

இடம்:- தேசிங்கின் கொலுமண்டபம்
இருப்போர்:- தேசிங்கு ராஜன், தூது வந்த தோன்றமல்லன், மற்றும் கொலு மண்டபத்திலுள்ள பிரதானியர்.

தேசிங்:- நவாப், கப்பம் கேட்டாரா? கப்பம் கட்ட முடியாது என்று சொல்லும்.

தோன்றமல்லன்:- பாளையப்பட்டுகள் எங்கும் [illegible] சென்று கப்பம் வாங்கிவருகிறேன்.

தே:- வாங்க முடிந்தவர்களிடம் வாங்கிக் கொள்ளட்டும், என்னிடம் அந்த வரட்டு ஜம்பம் பலிக்காது!

தோ:- அப்படியானால் கப்பம் கட்டப் போவதில்லையா?

தே:- கட்டுகிறேன், கத்தி முனையில்-வாள் முனையில் வாங்கிக்கொள்ளட்டும் உங்கள் நவாப், ஆண்மையிருந்தால், வீரமிருந்தால்!

தோ:- போர் தான் உங்கள் முடிவா?

தே:- ஆம், தோன்றமல்லா, போரேதான்! ஆறிலும்சாவு, நூறிலும்சாவு- அதனை இந்த உரிமைப் போரில் அடைவதை நான் பெருமையாகக் கருதுகிறேன்.

தோ:- நவாபுடன் மோதுவதால்.........

தே:- என்ன நடந்துவிடும்-செஞ்சியே, சுடுகாடாகிவிடுமோ - தோல்வியைக் கண்டதில்லை, நான், தோன்றமல்லா-தோல்விவருவதானால் அது, என் பிணத்தைத் தான் பார்க்க முடியும்!

[தோன்றமல்லன் விடைபெற்று வெளியேறுகிறான். சோதிடர் பைய ராமகிருஷ்ணய்யா திருதிருவென விழிக்கிறார். கொலு மண்டப நிகழ்ச்சி முடிந்ததும் தேசிங் சந்திக்கிறான்]

பை:- மகாராஜாவுக்கு இன்று மகா கோபம், ருத்திரத் தாண்டவமே ஆடிவிட்டீர்கள்!

தே:- போதும் சோதிடரே, கொண்டவனைக் கண்டால் கொடுமை பல சேரும், ஆகவே திரை கட்டுங்கள் என்று திட்டம் தந்தீர்—இதோ கொடிய போரே வந்துவிட்டது!

பை:- ராஜன், தாங்கள் விஷ்ணு பக்தர்—ரங்கநாதர் அருள் உண்டு. எதற்கும் அஞ்சத் தேவையில்லை.

தே:- போதுமையா, ஆண்டவன் அருளை நாம் பெற முடியும்—உம் சாத்திர அறிவும், அதனால் நீர் சாதித்த சேதியும் என்ன ஆயிற்று?

பை:- திரை கட்டி, தேவியாரைப் பாராததால் தான் இன்று போருக்கான நடவடிக்கை தொடங்கிற்று. இல்லாவிட்டால் அது என்னமோ நடந்திருக்குமே! சாத்திரத்தை சந்தேகிக்காதீர்.

தே:- சாத்திரம் சாத்திரம் என்று நீர் கத்தும்பொழுதெல்லாம் எனக்கு ஆத்திரம் தான் வருகிறது.

[சோதிடர் நழுவிவிடுகிறார். தேசிங் திகைத்து நிற்கிறான்]

காட்சி 4.

இடம்:- அரண்மனை அந்தப்புரம்
இருப்போர்:- ராணி, தேசிங்.

ரா: அன்பரே, திரைகட்டினீர், தேச நன்மைக்கென்று! சாத்திரம் என்ன செய்தது? போர் வந்துவிட்டதே!

தே:- அரண்மனை புரோகிதத்தின் ஆக்கினை—அதனை மீறவும் முடியாது! ஆகவேதான் திரை போட்டேன். அதனை இன்னமும் நிறைவேற்றத்தான் போகிறேன்.

ரா:- மன்னிக்கவேண்டும், போருக்குப் போகிற உங்களை நான் பார்க்கத்தான் வேண்டும்.

தே;- இல்லை ராணி, பொறுத்திடுவோம். போரிடப் போகிறேன் — போர் முடிந்தவுடன் திரும்பி விடுவேன்—அதற்குள் மூன்றாண்டுகள் முடிந்துவிடும்!

ரா:- போர் என்றால் சாவும் சர்வசாதாரணமாயிற்றே! நான் எப்படி மனமொப்பி அனுப்புவேன்?

[கண்ணீர் விட்டு கலங்குகிறாள்.]

தே:— வீரன் உன் கணவன், ராணி.

ரா:- தெரியும் கண்ணாளா, இருந்தாலும், நான் அவ்வீரனை என் விழிகளால் பார்த்து, வழியனுப்ப முடியவில்லையே?

தே:- அதனால் என்ன — நான் உன் அகவிழிகளில் தெரியவில்லையா —உன்னை என் 'மனக் கண்களால் பார்க்கவில்லையா?

ரா:- என் கண்ணாளரை, இன்று என் கண்களால் பார்க்கக் கருணை காட்டத்தான் வேண்டும்

தே:- எனக்கு மட்டும் அந்த ஆசையில்லையா, எண்ணம் இருந்தாலும் அந்த ஏடு புரட்டியின் சோதிடம் தடுக்கிறது!

ரா:— ஏடு புரட்டி கட்டிய கதை தான் பொய்த்து விட்டதே!

தே:— இருந்தாலும், நாம் ஏற்ற விரதத்தை முடித்தாக வேண்டும் கண்மணி.

[தேசிங், தன் வாளை எடுக்கிறான்—திரையை சிறிது கிழிக்கிறான். அதன் வழியாகத் தன் அன்பு மனைவியின் கரத்தை எடுத்து முத்தமிடுகிறான்.]

ரா:— நாதா......

தே:— போருக்குப் புயல்போலப் போகிறேன்—போர் முடிந்தவுடன் கொடிப்பொழுதில் உன்னை நாடி ஓடியே வருவேன்.

காட்சி 5.

இடம்:- போர்க்களம்.
இருப்போர்:- ராணி, தோழி, பைய ராமகிருஷ்ணய்யா.

[தேசிங்கு பிணமாகக் கிடக்கிறான். ராணி ஓடிவந்து அவன்மீது விழுந்து அழுகிறாள்.]

ரா:- கண்ணாளா, அன்று தங்களை மணக்கோலத்தில சந்தித்தேன்— இன்று பிணக்கோலத்தில் பார்க்கிறேன். போர் முடித்து, வெற்றியில் வருவேன் என்று சொல்லி வந்தீர்— நீர் மடிந்து விட்டீரே, இனி நான் என்ன செய்வேன்? என் கை பிடித்தீர் அன்று — பிறகு புரட்டனின் கூற்றைக் கேட்டு திரையிட்டீர்! இதோ தேம்புகின்றேன் — அந்தப் புளுகன் சாத்திரம் எனக்கென்ன செய்யப் போகிறது!

பை:- மனந் தேறுங்கள், மகாராணி.

ரா:- போதும், சோதிடரே! உம் ஆறுதல் மொழிகளை நான் எதிர்பார்த்துஏங்கிக் கிடக்கவில்லை! இந்த இடத்தை விட்டு—என் பார்வையை விட்டே உடன் விலகிச் செல்லும்.

[பயத்துடன் அவ்விடத்தை விட்டு அகல்கிறார் சோதிடர்]

இந்த பையராம கிருஷ்ணய்யாக்கள், எனக்கும், என் மணாளருக்கும் இடையே மட்டும் திரை கட்டவில்லை — இந்த நாட்டு மக்களின் மதியில்உண்மைக்கு எதிராகதிரை கட்டிவிட்டார்கள். அந்தத் திரைக்குள்ளிருந்து இவர்கள் தெந்தினம் பாடுகிறார்கள். கணவனை மனைவி பார்க்கக் கூடாதாம்—பார்த்தால் பாழ்பட்டு விடுமாம் நாடு—என் இன்பக்களஞ்சியம் அப்படித்தானே இருந்தார். திரை கட்டினாரே, இன்று மண்ணிலே சாய்ந்து விட்டாரே! சோதிடம் ஒரு சூது, சாத்திரம் சிலரின் உளறல், வேதம்' வேண்டுமென்று கட்டிக்கொண்ட ஏற்பாடு என்று தானே தெரிகிறது! இல்லாவிட்டால், ஆண்டவ பக்தி அதிகமுள்ள என் காதலர் சாவானேன்?

[ஆத்திரமாகக் கூவுகிறாள் ராணி]

தோ:- அம்மா, நடந்தது நடந்துவிட்டது. இனி நடக்க வேண்டியதைப் பற்றி யோசிப்போம்.

ரா:- என்னடி இனி செய்யவேண்டியது! தீயை வளர்த்து, அதில் தீயர் பகுத்தறிவுக்குக்கட்டும் திரையைப் போட்டு கொளுத்து—நாட்டையும், மக்களையும் நலியவைக்கும் ஏடுகளைக் கொளுத்து—பிறகு நான் இறங்கிடுகிறேன் அச்செந்தீயில்!

[ராணியின் கோபக் குரல், தூரத்திலேஇருந்த கோட்டை மதிலில் பட்டு எதிரொலித்தது. பிணங்களுக்கிடையே அந்தப் பெண் குரல் கேட்க பயங்கரமாக இருக்கிறது]

காட்சி 6.

இடம்:- தீ எரியுமிடம்

இருப்போர்:- பைய இராமகிருஷ்ணய்யா தோழி!

[தீ நன்றாக எரிகிறது. அதில்தான் தேசிங் மன்னனின் தங்க உடல் எரிந்துவிட்டது. பிறகு அவனது மனைவியும் தன் உயிரை மாய்த்துக் கொண்டாள். அத்தீ எரிகிறது அத் தீயொளியில் செஞ்சிக்கோட்டை தெரிகிறது.]

தோ:- கோட்டை, கொத்தளங்கள்... இத்தனையும் கட்டியாண்டவர், இதோ, தன் காதலியைக் கண்ணால் காணவும் முடியாமல் மடிந்துவிட்டார்! சாத்திரமாம், சோதிடமாம—எதையோ கூறி பிரித்து வைத்தான. அதனால் அவனுக்கென்ன இலாபம்? அட சதிகாரா, சவலாட புரியில் புகுந்து பொல்லாங்கு புரிந்ததால் வந்தது என்ன—நாடே பிணக்காடாய்விட்டது!

[தோழி புலம்புகிறாள். சோகக் குரலைக் கேட்டு சோதிடர் வருகிறார்]

பை:- மகாராணியின் பெருந்தோழி, இந்த வேளை மகா பொல்லாது—இங்கு வரக்கூடாது'

தோ:- எனக்கும் சோதிடம் கூறுகிறீரா? நாள், நட்சத்திரம், வேளை, நேரம் என்றெல்லாம் என்னிடம் பேசவேண்டாம்.

பை:- ஆத்திரம் வேண்டாம், அம்மையே. என் மீது சீறிடுவதால் நீ காணும் நன்மை என்னவோ! தேவியாரும் அப்படித்தான் பேசினாள்—பிறகு தீயிலே பொசுங்கிப் போனாள். தோழியும் என்னைத் தாறுமாறாகப் பேசுகிறாள் இப்பொழுது!

தோ:- இதேதடா, மகா சங்கடம்—தாங்கள் இந்த இடத்திலிருந்து சென்றுவிட்டால் போதும்!

[கேலியும் தொனிக்கிறது—அழுகையும்வருகிறது.]

பை:- அம்மையே, என் சாத்திர அறிவிலே சந்தேகம் — அதுதான் கூடாது என்கிறேன். ஏன்? இன்னும் மூன்றாண்டுகள், கணவனும் மனைவியும் கண்ணாலும் கண்டு மகிழக் கூடாது—கண்டால், நாட்டிற்கு நல்ல காலமில்லை என்றேன். அத்துடன் நிறுத்தவில்லை.

தோ:- மேலும் என்ன சொன்னீர்?

பை:- சொன்னேன், இப்பொழுது நடந்ததை! மூன்றாண்டுகள் திரைக்கு அங்குமிங்கும் இருக்கவேண்டும். இருந்துவிட்டால் சொர்க்கம் கிடைக்கும் என்றேன். இதோ தேசிங் வீர சொர்க்கம். ராணியும் அங்கேதான் அவனைத் தேடிப்போய் விட்டாள்.

தோ:- அட பாவி,

பை:- பாவத்தைப் போக்கத்தான், அந்த பக்குவம் சொன்னேன். அதிலேயும் சிறு தவறு நடந்துவிட்டது.

தோ:- அதென்ன தவறு!

பை:- திரை கிழிக்கப்பட்டது—என் சாத்திரம் அவமானப்படுத்தப் பட்டது.

தோ:- போருக்குப் போகுமுன்...

பை:- போருக்குப் போவதாக இருக்கட்டும்—அல்லது இந்தப் பூலோகத்தைவிட்டு மறைவதாக இருக்கட்டும்— திரையைக் கிழிக்கலாமா? தேவியாருக்குத்தான் அவ்வளவு துடுக்கு கூடுமா?

தோ:- பெரியவரே, பிதற்றுநீர்

பை:- நான் பேசுவது உண்மை— கரத்தை மட்டும் தொட்டான் காவலன்—ஆகவே தான் காயிழந்து மாண்டான் தேசிங்.

[இதுவரை பொறுமையாக இருந்த தோழிக்கு ஆத்திரம் அதிகமாகிவிட்டது. கடுமையான குரலில் பேசினாள்.]

தோ:- சாத்திரப் பித்தரே-உமது நாற்ற வாயை மூடும். சாத்திரம், சாத்திரம் என்று கூறி ஒரு நாட்டையே பிணக்காடாக்கி விட்டீரே! உமது சோதிட அறிவு, இந்த அழிவை முன்கூட்டியே ஏன் சொல்லக்கூடாது? சொலலியிருந்தால் தடுத்திருக்கலாமே! கப்பம் கேட்க

வந்தபொழுது, வந்த பிறகு காவலன் கொதிப்படைந்த பொழுது, நவாபின் சேனை நமது தாயகத்தை வளைத்தபொழுது, பிறகு சளைக்காது நம் வீரர் போரிட்டபொழுது, உமது சாத்திரம் என்ன செய்தது? வெற்றியைத் தேடித்தரவேண்டாம். விவேகப் பாதையாவது காட்ட முடிந்ததா? இல்லை. வேண்டாத விபரீதத்தைத்தான் விளைத்தது. நாடாண்டவனை, தன் நாயகியைக் கூட காணக்கூடாது என்று கூறினீர்—இடையே வெள்ளைத்திரை—கடைசியிலே இரத்த வெள்ளத்திலே கணவன்-கொழுந்திடும் செந்தீயிலே காதலி—உமது சாத்திரம், மகா விசித்திரம்!

பை:- நீயும் அதே நாத்திகப் போக்கில் பேசுகிறாய் — நாக்கை யடக்கு!

தோ:- சுவாமி, மன்னிக்கவேண்டும்! ஒரு சிறு சந்தேகம்.

பை:- அப்படிக் கேள் — அது புத்திசாலிக்கு அழகு.

தோ:— உங்கள் எதிர்காலம் உங்களுக்குத் தெரியுமா?

பை:— ஏன் தெரியாது—தேசிங் மடிந்துவிட்டதால் நவாபிடமே நான் போய்விடப் போகிறேன்.

தோ:- சாதகம் சொல்லும் எதிர்கால பலன்தானே இது?

பை:- ஆமாம்......

(நா குளறுகிறது)

தோ:- அஞ்சவேண்டாம், அறிஞரே!

பை:- நான் எதுக்கம்மா பயப்படவேண்டும்.

தோ:- பயப்படத் தேவையில்லை. ஆனால், பட்டனடைய வேண்டும்' உங்கள் எதிர்காலம் என்னவென்று நான் கூறுகிறேன்—அதனை அறிந்து கொள்ளவேண்டும்.

பை:- என்ன......

தோ:- வாயைப்பிளக்கவேண்டாம். சாத்திரம் சொல்லும் சரியான தகவல் இது—நீரும் இப்படி தீயிலே சிக்கித்தான் சாகப் போகிறீர்.

பை:- ஏன்?

தோ:- சொர்க்கம் போக வேண்டாமா?

பை:- ஐயோ......

தோ:- ஆம், சோதிடரே, அன்புக்குத் திரை கட்டிய மகானுயிற்றே— உங்களுக்குச் சொர்க்கம் எவ்வளவு சுலபத்தில் கிடைக்கவேண்டும். கால தாமதமே கூடாது!

பை:- பேசுவது புரியவில்லையே!

தோ:- என்ன சுவாமி, அபலை மனைத் தாதி நான்—படிப்பே தெரியாத பட்டிக் காட்டுப் பாவை—நீங்கள் சகல கலா வல்லுநர். தங்களுக்குப் புரியவில்லையா?

பை - (தடுமாற்றத்துடன்) நீ பெண்ணா அல்லது பேயோ......

தோ:- பேயல்ல, சுவாமி, தேவ லோக மாது, தங்களை சொர்க்கத்திற் கழைத்துச் செல்ல வந்துள்ளேன்.

பை:- (மிரள மிரள விழித்தபடி) தாயே, என்னை......

தோ:- அட சதிகாரா, எங்கே நழுவுகிறாய், நில்!

[தோழி கோபத்தின் எல்லையை அடைந்துவிட்டாள். மெதுவாக நழுவப் பார்க்கும் சோதிடரைப் பிடித்து உலுக்குகிறாள். பிறகு எரியும் தீயிலே தள்ள முயற்சிக்கிறாள். சோதிடக் கிழவர் தவிக்கிறார். பரிதாபமாகப் பேசுகிறார் விடவில்லை அவள். பிடித்துத் தள்ளிவிடுகிறாள். வெறி கொண்டவள்போல சிரிக்கிறாள்.]

தோ:- தீயே, திக்கெட்டும் பரவி, இத்தீயர்களின் திருட்டுத்தனங்களைத் தீய்த்துவிடு-பாழான கருத்துகளை பொசுக்கித் தள்ளு-தீயே நீ வாழ்-நாளும் சாகிறேன்.

[வெறி பிடித்தவள் போல சிரிக்கிறாள்-எரியும் தீயினை வெறிக்க வெறிக்கப் பார்க்கிறாள்]

நாஞ்சில் மாவட்டத்திலிருந்து வருகிறது.

"அறப்போர்"

(மாத இதழ்)

சீர்திருத்தக் கருத்துடன், கதை கவிதை, கட்டுரை, எதிர்ப்புக்கு மறுப்பு, இன்னும் பல சுவையான பகுதிகள் உண்டு.

எல்லா ஊர்களிலும், முன்பணம் கட்டும் ஏஜண்டுகள் தேவை.

"அறப்போர்"
கோதையூர்
(A) நாகர்கோவில் P. O.

"பிராக்ரஸ்"

தோழர் டி. எம். பார்த்தசாரதி அவர்களால் சென்னையிலிருந்து வெளியிடப்படும் மேற்படி ஆங்கில வார இதழைக் கண்டோம். மகிழ்ந்தோம். திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளையும் நிகழ்ச்சிகளையும் தாங்கி, அழகு ஆங்கிலத்தில் நான்கு இதழ்கள் வெளிவந்துவிட்டன. நமது எண்ணங்களை தமிழறியாதோரும் அறியச் செய்யும் வகையில் ஆங்கிலத்தில் ஒரு இதழ் இல்லையே, என்ற குறையை "பிராக்ரஸ்" விரட்டி வருகிறது.

கனல் கக்கும் எழுத்துக்கள், கருத்து மிதக்கும் கட்டுரைகள், பொதுச் செய்திகள் குறித்த விளக்கங்கள் யாவும் போற்றற் குரியன.

"கரிகாலன்" என்னும் பெயருடன் மேனாட்டு அனுபவமும் ஆங்கில அறிவும் சாலப்பெற்ற நமது இயக்க நண்பர் ஒருவர் அருமையான கட்டுரைகளை ஆங்கிலத்தில் தீட்டிக் கொண்டு வருவது—ஒரு தனிச் சிறப்பு.

இம்முயற்சி பாராட்டுக் குரியது மட்டுமல்ல; எல்லோரும் வரவேற்கக் கூடியதுமாகும். துணிவுடன், "பிராக்ரஸ்" இதழை நாட்டுக்குப் படைக்க முன்வந்திருக்கும் தோழர் டி. எம். பார்த்தசாரதி திராவிடத்தின் பாராட்டுக் குரியவர்.

திராவிட மாணவர்களுக்கு 'பிராக்ரஸ்' ஒரு கேடயம். உலக மொழியான ஆங்கிலத்தில், நமது எண்ணங்கள் பரப்பப்படவேண்டிய அவசியம் இப்போது அதிகமாகி வருகிறது. ஆகவே, நமது கழக முகாமிலிருந்து, பல ஆங்கில எழுத்தாளர்களும் தேவைப்படுகின்றனர்.

புதிதாக எழுதப் புகுவோருக்கு 'பிராக்ரஸின்' அணைப்பு கிடைக்கும்.

ஆகவே நமது மாணவர்கள், இதை நன்கு பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

"பிராக்ரஸ்" இதழ், வளர்பிறையாகி, நமது கருத்துக்களை முழக்கட்டும் என்ற ஆசையோடு அதன் ஆசிரியர், வெளியீட்டாளர் அனைவரையும் நாம் வாழ்த்துகிறோம். வாழ்க பிராக்ரஸ்! வளர்க முன்னேற்றம்!!

'அத்திப்பழம்'—அத்தனையும் சொத்தை

3-ம் பக்கத் தொடர்ச்சி

வாலிபர்களைக் காங்கிரசில் சேரும்படிச் செய்யவேண்டும் என்று நேரு கூறினார். வாலிபர்களை வசீகரிக்கக்கூடிய திட்டம், வாலிபர்களின் நம்பிக்கையைப் பெறக்கூடிய திட்டம் என்ன என்பது பற்றி யாரும் சிந்திக்கவில்லை.

ஒரு உறுப்பினர், உருப்படியானது அல்ல என்ற போதிலும், ஒருவகையிலே வசீகரம் தரக்கூடிய ஒரு ஏற்பாட்டைக் குறிப்பிட்டார்.

ஏழைபங்காளர் என்று நாம் கூறிக்கொண்டு இருப்பது போதாது, அதை நடைமுறையில் காட்டவேண்டும். பதவிகிடைத்ததும் படாடோபத்திலே மூழ்கிவிட்டோம். அதைப் போக்கி, எளிய வாழ்க்கை நடத்த வேண்டும்—என்பது அந்த உறுப்பினரின் கருத்து. எனவே, அவர், குடிஅரசுத் தலைவர் பாபு ராஜேந்திரரும், முதலமைச்சர் ஜவஹரும், இப்போது வாசம் செய்யும் அரண்மனைகளைத் துறந்து, குடிசையிலே குடியிருந்து கொண்டு கோலோச்ச வேண்டும், அப்போதுதான் பாமர மக்களுக்குப் பாசமும் பற்றும் ஏற்படும்—நிலைக்கும்—வளரும்—என்று கூறினார்.

இப்படிப் பல யோசனைகள்! எல்லாம் ஒரு மனதாக அல்ல—வேறு வேறு யோசனைகள்! ஒரே ஒரு விஷயத்திலே மட்டுந்தான் அங்கு ஒன்றுபட்ட கருத்து இருந்தது—காங்கிரஸ் கெட்டுவிட்டது—பட்டு வருகிறது — என்பதுதான் அந்தக் கருத்து. காங்கிரசாட்சியிலே மக்களுக்குத் திருப்தி இல்லை; காங்கிரஸ் அமைப்பிலே பெரிய தலைவர்களுக்குத் திருப்தி இல்லை; பெரியதலைவர்களிடத்திலே சாதாரணத் தலைவர்களுக்குத் திருப்தி இல்லை, தலைவர்களிடம் காங்கிரஸ் தொண்டர்களுக்குத் திருப்தி இல்லை—(பிரசாரம் செய்து தீரவேண்டியவர்கள் விஷயம் வேறு!)

இப்படி, 'அத்திப்பழத்தைப் புட்டால் அத்தனையும் சொத்தை' என்ற பழமொழிப்படி இருக்கிறது காங்கிரசின் நிலைமை.

எனினும் நாம், குறைகூறக் கூடாதாம்—கூறினால் நாக்கைத் துண்டித்து விடுவார்களாம்!!

குறை கூறுகிறார்கள்—பலர்—காரணம் பல—நோக்கம் பல—எடுத்துக்காட்டும் விஷயங்களும் பலப்பல.

யார், எந்த நோக்கத்துடன், குறை கூறினாலும், எதைக் குறையுடையது என்று சுட்டிக் காட்டுகிறார்களோ, அது, உண்மையில் குறையுடையது அல்ல, என்று விளக்கிக் காட்டி, குறை சொன்னவர்கள் வெட்கித் தலை குனியும்படிச் செய்வது—சிறந்த முறை — குணவான்கள் கைக்கொள்ளும் முறை.

குணவான்களாக மட்டும் இருந்தால் போதாது, எதைப்பற்றிக் குறை கூறப்படுகிறதோ, அந்த விஷயத்தைப் பற்றிய முழு விவரமும் விளக்கமும், தெரிந்துரைக்கும் ஆற்றலும் இருக்கவேண்டும். இவற்றைவிட, முக்கியமானதாக மற்றொன்று இருக்கவேண்டும் — அதாவது, குறைசொல்பவன், இருப்பதை மறைப்பது, இல்லாததைக் கூறுவது, உள்ளதை உருமாற்றிக் காட்டுவது, எனும் 'தில்லு மல்லு' பேசியவனாக இருக்கவேண்டும். அப்போதுதான், குணமும் திறமையும் கொண்டவர்கள்கூட, குறை சொல்பவன் வெட்கித் தலை குனியும்படிச் செய்யமுடியும், உண்மையை மக்கள் முன் காட்டுவதன் மூலம்.

எடுத்துக் காட்டாக இதை. ஆளவந்தார்கள் 16 அவுன்சு கொடுத்து வருகிறபோது, குறைகூறும் போக்கினன், பாழான சர்க்காரிலே பத்து அவுன்சுதானே தருகிறார்கள் என்று பேசினால்—முதலில் மக்களே கேட்டுக்கொண்டிருக்க மாட்டார்கள் அண்டப்புளுகை. என்ன காரணத்தாலோ, சிலர் கேட்டுக்கொண்டிருந்தாலும், குணவான், அந்தச் சிலரிடம், "பேஷ் கடைக்கு வந்து பாரப்பா — பத்தா — பதினாறு — என்று புரிந்துவிடும்" என்று கூறினால் போதும், குறை கூறுவோன் மக்கள் முன் தலைகாட்ட முடியாது.

மக்களிடமிருந்து வசூலிக்கும் வரிப்பணத்திலே பாதிக்கு மேல் பட்டாளத்துக்கே செலவிட்டு விடுகிறார்கள்—என்று கூறினால் இல்லையப்பா—இதோ பார், சர்க்காரின் வரவு செலவுக் கணக்கு, பத்திலே ஒரு பாகத்துக்கும் குறைவாகவே பட்டாளத்துக்குச் செலவிடுகிறோம், என்று கூறுவதற்குத் தக்கவிதத்திலே, நிலைமை இருந்தால், குறை கூறுவோனைக் குணாளன், வெட்கித் தலை குனியும்படிச் செய்துவிட முடியும்.

திறம் கொண்ட ஓவியனிடமும், தீட்டுக்கோலும் வண்ணக் கலவையும் இருந்தால்தானே—ஓவியம் தீட்ட!

அதுபோலத்தான், குணமும் திறமையும் கொண்டவர்களானாலும், அவர்களுக்கும் 'நிலைமை' சாதகமாக இருக்கவேண்டும். இல்லையானால் பலனில்லை.

இப்போது—குறை கூறுவோர்கள் எடுத்துக் காட்டும் விஷயங்கள், உண்மையாக இருக்கிற காரணத்தால், குணமும் திறமையும் கொண்டவர்களாலும், குறைகூறுவோருக்கு, கண்ணியமான முறையிலே பதில் தர முடியவில்லை.

இதை உணரும்போது, உத்தமர்கள், மௌனமாகி விடுகிறார்கள் — தந்திரம் தெரிந்தவர்கள் கல்லுளை கூறிவிட்டுப் போய்விடுகிறார்கள் — ஆனால் எல்லோரும் அதுபோலவா, சிலருக்குச் சீற்றம் பிறந்து விடுகி

வாணியம்பாடியில் மாணவர் மாநாடு

வடார்க்காடு மாவட்டத் திராவிட மாணவ முன்னேற்றக் கழக முதல் மாநாடு 24—2—5-ல் நடைபெறும்.

தலைவர்:- பீ. ஆர். கோபால கிருஷ்ணன் பி. ஏ.

திறப்பாளர்:- இரா. இளம்வழுதி எம். ஏ., பி. எல்.

அண்ணாதுரை எம். ஏ., நெடுஞ்செழியன் எம். ஏ., மு. கருணாநிதி, ஈ. வே. கி. சம்பத், கே. ஏ. மதியழகன் பி. ஏ., என். எஸ். இளங்கோ, டாக்டர் தருமாம்பாள், அரங்கண்ணல், தில்லை. வில்லாளன் பி. ஏ. (ஆனர்ஸ்) மற்றும் பல கல்லூரி மாணவத் தோழர்களும் கலந்து கொள்வர்.

மாநாட்டில், இரவு, நடிப்புப் புலவர் கே. ஆர். இராமசாமி குழுவினரின் 'ஓர்இரவு' நாடகம் உண்டு.

உள்ளதைச் சொன்னால் உறுமுவதேன்?

றது—கூர் மழுங்கிப் போன கத்தி கொண்டு, தேங்காயை உறிக்கும் போது, பொறுமையை இழந்து விடுபவர்கள், கத்தியைக் கீழே போட்டுக் குத்துவது உண்டு—கத்தி ஏதோ இவர்களுடன் பகைகொண்டு, காரியத்தைச் செய்ய மறுப்பது போல!—அது போல, எடுத்துக் காட்டப்படும் குறையை, குறை அல்ல என்று நிரூபிக்கப் போதுமான 'ஆதாரம்' கிடைக்காத நிலையிலே, ஆத்திரம் பிறக்கிறது—உடனே எடுத்துக் காட்டப்பட்ட 'பொருளை' விட்டு விடுகிறார்கள் — எடுத்துக் காட்டுபவன்மீது பாய்கிறார்கள்— மக்களும் பொருளை மறந்து விட்டு, 'ஆளை'ப் பற்றிய கவலையில் ஈடுபட்டு விடுவார்கள் என்று, தவறாக எண்ணிக் கொள்கிறார்கள்.

மக்களுடைய கவலை எல்லாம், பேசப்படும் பொருள் பற்றித்தான்—அவர்கள் ஆவலுடன் எதிர்பார்ப்பதெல்லாம், குறைகூறுவோன் கூறின பொருளை, குணவான், எப்படி மறுக்கிறான், என்பதுதான்.

ஆளைப் பற்றிய குறை கூறுவதிலே, 'குறை கூறுவோர்' ஈடுபட்டால், குறை கூறுவோரின் வாயை அடக்க, அவர்களைப் பற்றிக் குறை கூறிப் பேசுவது, ஓரளவுக்குப் பயன் தரும்.

பேசப்படுவது, நாட்டிலே உள்ள நிலைமைகள் பற்றி—பிரச்னை பற்றி—இதற்கு என்ன பதில்? எங்கே பதில்? ஏன் பதில் இல்லை!—இது மக்களின் உள்ளத்திலே ஓயாது எழும் அலை. அதை அடக்க, பொருளை மறைத்து விட்டு, ஆளின்மீது பாய்வது—வீண் வேலை—மக்கள் அதை நெடுநாட்களுக்கு ரசித்துக் கொண்டிருக்க மாட்டார்கள்.

மற்றோர் முறை—காரிய மாற்றும் கடமை உணர்ந்தோர் கையாளக் கூடியது இருக்கிறது — அது, குறை கூறுபவர்களைப் பற்றிக் கவலைப்படாமல், அவர்களுக்கு மறுப்புரை கூறுவது, மழுப்புவது போன்ற வீண் வேலையிலும் ஈடுபடாமல், எடுத்துக் காட்டப்பட்ட குறைகளைக் களைவதிலேயே, கண்ணும் கருத்துமாக இருப்பது. இந்த முறை, குறை கூறுவோரின் கன்னத்தில் அறைந்து, காதைத் திருகித் தலையில் குட்டுவதை விட, 'தரமானது.'

ஒன்பது அவுன்சா உணவு! ஒட்டிய வயிறு உங்கள் ஆட்சியின் பலன்! — என்று குறை கூறினால்— அவுன்சைப் பன்னிரண்டு ஆக்கினால், மூன்று அவுன்சு — குறை கூறுவோனை மூலையில் உட்காரச் செய்து விடும்.

இதற்குக் காரியமாற்றும் திறமையும்—சுயமாகச் சிந்தித்துப் பார்க்கும் உரிமையும் எண்ணித் துணிக கருமம், துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு — என்ற புத்தி நுட்பமும், தான் தீர்மானித்ததைத் தடையின்றி நிறைவேற்றுவதற்கான முழு உரிமையும் இருக்க வேண்டும்.

X X X

“பழங்கால ஏற்பாடுகளைப் பாழாக்காதீர்கள்—சட்டம் செய்து சம்பிரதாயத்தைச் சாய்க்காதீர்கள் — மக்களின் மத உணர்ச்சிக்கு அதிர்ச்சி ஏற்படும்படியான சட்ட திட்டங்கள் செய்யாதீர்கள் — சர்வ நாசம் சம்பவிக்கும் — காங்கிரசுக்கும் கெட்ட பெயர் ஏற்படும்— அடுத்த தேர்தலில் காங்கிரசுக்கு மக்கள் ஆதரவு தர மாட்டார்கள்—சொன்னேன், சொன்னேன்—!” என்று சட்டசபையிலே பேசுகிறார் திருவண்ணாமலை அண்ணாமலையார், பெண்களுக்குச் சம உரிமை தருவது, மதஸ்தாபனங்களின் பொருளாதார நடவடிக்கைகளைச் சர்க்கார் மேற்பார்வைக்குக் கொண்டு வருவது போன்ற, சாதாரண சீர்திருத்தத்திட்டங்களைப் புகுத்துவதற்குக் காங்கிரஸ் ஆட்சியினர் முயற்சிக்கும் போதெல்லாம். அந்தப்போக்கை, அண்ணாமலையார் போன்ற பலர், குறை கூறிப் பேசுவது மட்டுமல்ல, கண்டிப்பது மட்டுமல்ல, எச்சரிக்கை விடுகிறார்கள்— சாபம்கொடுக்கிறார்கள் —இதுஎன்ன கதர்ச்சட்டைக்காரன் ஆட்சியா, கருப்புச்சட்டைக்காரன் ஆட்சியா!—என்று, ஆவேசத்துடன் பேசுகிறார்கள். தயவு தாட்சணியமின்றி ஏசுகிறார்கள்!

இவர்களைக் 'குறை கூறுவோர்'— பட்டியலில சேர்ப்பது கிடையாது— சேர்த்தாலும், நம்மை நாக்கில் நரம்பின்றி நிந்திக்கிறார்களே, அது போல இவர்களைக் கண்டிப்பது இல்லை.

விகடனும் கல்கியும், தங்களுக்குப் பிடித்தமல்லாத ஏதேனும் ஒரு காரியத்தைக் காங்கிரசோ, காங்கிரசாட்சியோ செய்து விட்டால், படம் தீட்டிப் பரிகாசம் செய்கின்றன — தலையங்கம் கொண்டு தாக்குகின்றன. எனினும் அவைகளைக் குறை கூறுவோர் பட்டியலில் சேர்ப்பதில்லை— சுடு சொல் ஒன்றும் வீசுவதில்லை.

ஊருக்கிளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி என்ற பழமொழிப்படி, நாம் குற்றம்கண்டு கூறினால் தான், கோபம் 'பொத்துக்'கொண்டு வருகிறது.

ஊரூருக்கும் சென்று விளாசுகிறார் கிருபளானி, காங்கிரஸ் கெட்டுவிட்டது—காங்கிரசாட்சி நாட்டைக் கெடுத்துவிட்டது என்று—கொடுக்கும் சவுக்கடியைப் பெற்றுக் கொண்டு அழவும் வாய்திறக்க மறுக்கிறார்கள். நாம் பேசினால்மட்டும், ஆத்திரம் அலையாகக் கிளம்புகிறது. ஏன்? அவர்கள், காங்கிரசைக் கண்டிப்பது நாட்டுமக்கள் மனதிலே பதிவதைவிட ஆழமாகவும் அழுத்தமாகவும், நமது பேச்சு பதிந்துவிடுகிறது. அவர்களை எப்போதுவேண்டுமானாலும் சரிப்படுத்திக் கொள்ள முடியும் — நம்மை அடக்குமுறையால் அடியோடு அழித்து ஒழிப்பது தவிர, ஆசைவார்த்தை கூறிச் சரிப்படுத்திவிட முடியாது எனவேதான், காங்கிரசின் நிலைபற்றியும் காங்கிரசாட்சியின் அலங்கோலம் பற்றியும் நாம் பேசும்போது, பற்களை நறநறவெனக் கடித்துக்கொண்டு, பாய்ந்தோடி வருகிறார்கள்!

ஆமதாபாத்திலே அவர்களை கூடி அழுததைவிடவா, வேறு ஆதாரம் வேண்டும், நாட்டுமக்களுக்கு, காங்கிரசின் நிலையை உணர்த்த! சாப்பாட்டுக்கு உட்காரும்போது, அடிவயிற்றைக்கலக்கும் அளவுக்கு அடிக்கும் நாற்றம் போதாதா, இவர்கள் நாடாளும் இலட்சணத்தைத் தெரிவிக்க.

ஆட்சியின் இலட்சணத்தை மக்களுக்கு நித்த நித்தம் அவர்கள்படும் ஆயிரத்தெட்டு அவதிகள் நன்றாக எடுத்துக்காட்டுகின்றனவே.

சந்துமுனை சிந்து நடைக்காரர்கள்!

பட்டினிச்சாவுகளைவிடவா வேறு கண்டனம் வேண்டும் இந்த ஆட்சிக்கு.

சுடு! — நான் வாழ்ந்துகொண்டா இருக்கிறேன் இப்போது — சாவு என்னை என்ன செய்யமுடியும் — சுடு!—என்று ஒரு முதியவர், நெசவாளி போலீசைப் பார்த்துக் கூறினாரே, சேலத்தில் சிலநாட்களுக்கு முன்பு, அதைவிட வேறு என்ன வேண்டும், மக்களின் மனப்போக்கு எப்படி இருக்கிறது என்பதை விளக்க!

குறை கூறினால் கோபம் பிறக்கிறது—சொல்லடி கல்லடியால் குறை கூறுவோரை அடக்கிவிடலாமா என்ற அற்ப ஆசை உண்டாகிறது—அதற்காக தமிழ்மொழியிலும், பொதுவாழ்விலும் புதியதோர் மறுமலர்ச்சி (!) ஏற்படக்கூடிய விதமான பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது!

மணம் வீசும் மல்லிகைத் தோட்டம் மாற்றானுடையது என்று தெரிந்ததால் உண்டான மன எரிச்சலைப் போக்கிக்கொள்ள மன்னார்சாமி ஒருவன், மலக் குவியலைக் கண்டுபிடித்து, வாரி வாரி வீசினானாம் மல்லிகைத் தோட்டத்திலே—மணம் கெடும் என்று—ஆனால் வீசப்பட்டது உரமாகிவிட்டது தோட்டத்துக்கு. அதுபோல, வசைமாரி பொழிந்து வருகிறார்கள்.

குறை கூறுவோரின் தொகை வளர்ந்து வளர்ந்து, நேருவின் எதிரே கிருபளானி வீற்றிருந்து, சியாங்கின் கதிதான் நமக்கும்!— என்று எச்சரிக்கை செய்யும் அளவுக்கு வந்திருக்கிறது.

* * *

உள்ள குறையை எடுத்துக் கூறும்போது, வேதனை ஏற்படக்கூடும், வலிவற்ற மனதினருக்கு — ஆனால் வல்லமை மிக்கவர்கள், கூறப்படும் குறைகளைக் களைய முற்படுவார்களேயன்றி, கூறுபவனைத் துரத்திக்கொண்டு திரியமாட்டார்கள்—துரத்தியும் பயன் ஏற்படாது! ஆமதாபாத், நாசிக்குக்குப் பிறகு! நாசிக்கிலேயே, காங்கிரஸ் இருப்பதா இறப்பதா என்பதுதான் இப்போது உள்ள பிரச்னை என்ற தலைமை வகிக்கச் சென்ற டண்டன் கூறினார். இப்போது ஆமதாபாத்திலே, காங்கிரஸ் நோயாளிக்குக் கடைசி ஊசிபோடக் கூடினர்! ஊசியும் கிடைக்கவில்லை, மருந்தும் இதுவெனத் தெரியவில்லை!! இந்த நிலையிலா, குறை கூறுவோரைக் குப்புற வீழ்த்திவிட்டுத்தான் மறுவேலை என்ற வீறாப்புப் பேசுவது. வளர்கிறது, வளர்கிறது, வளர்ந்துகொண்டே வருகிறது, குறைகள்! அந்த 'மலை'யைக் கவனிக்காமல், குறையைக் களையாமல், கூறுவோரைக் காய்ந்து காணப்போகும் பலன் என்ன!

இலாபம் துளி குறைகிறது என்றால் முதலாளி கண்டிக்கிறான் காங்கிரசாட்சியை — உடனே அவனை அகமகிழச் செய்வது எப்படி என்று முயற்சிக்கிறார்கள்—காய்வதில்லை!

அவனே பிறகு 'காந்தி ஜெயந்தி' கொண்டாடுகிறான் — அமைச்சர் அதிலே கலந்துகொண்டு, முதலாளி—தொழிலாளி கூட்டுறவின் அவசியத்தை வற்புறுத்திப் பேசும் அருந்தொண்டிலே ஈடுபடுகிறார்.

வைதீகன் வசை பாடுகிறான் காங்கிரசாட்சி மதத்திலே கை வைக்கலாமா என்று. அவனிடம் 'வாத்சல்யம்' காட்டுகிறார்கள்—"ஏ! பத்தாம்பசலி! உன் காலம் முடிந்து விட்டது" என்று கூறுவது கிடையாது—கண்டிப்பது கிடையாது.

ஏகாதிபத்யம் இருந்த வரையிலே அதன் செல்லப்பிள்ளையாக இருந்து வந்த சர். சி. பி. யிடம் கொஞ்சுகிறார்கள்—அவர் குறைகூறிப் பேசினாலும்.

யார்கண்டித்தாலும்வராதகோபம் நாம் கண்டிக்கும் போது மட்டும் வரக்காரணம் என்ன? நமது கண்டனம், அவர்களின் நிலைமைத் தடுமாறச் செய்கிறது!! திகில்!! எனவே தான், 'தூற்றித்திரிவோம்' என்ற புதிய போக்கைக் கடைப்பிடிக்கிறார்கள்!

சட்டம் கொண்டு ஒருபுறம் சாடுகிறார்கள்!

சந்து முனைச் சிந்து நடையில் பேசி மற்றோர் புறம் சாடுகிறார்கள்.

இவை, எதற்கு உதவும்? குறைகள் வளர்ந்த வண்ணம் இருக்கின்றனவே! மக்கள், ஆட்சியால்படும் அல்லலை அன்றாடம் அனுபவித்துக் கொண்டு இருக்கிறார்களே! அந்த 'உள்ளக் குமுறலை' எப்படி அடக்கப்போகிறார்கள் — நம்மை நிந்திப்பதன் மூலமாகவா! நம்மை நிந்திப்பது, ஆப்பை அசைக்கும் கதையாக அல்லவா முடியும்!

இவர்கள் யார் குறை கூற!—இது ஒரு பாடாவதிப் பல்லவியாகிவிட்டது.

இவர்களெல்லாம் வெள்ளைக்காரனிடம் ஏவலராகக் கிடந்தவர்கள், இவர்களா குறை கூறுவது? ஏது அவர்களுக்கு இந்த உரிமை.

இவர்களெல்லாம் பொப்பிலி பித்தாபுரம் போன்றவர்களின் பின்னேடிக் கிடந்தவர்களல்லவா-இவர்களா எம்மைக் குறை கூறுவது!

இப்படிப் பேசுகிறார்கள் — பேசுகிறார்களா!— ஏசுகிறார்கள்!

சுய இலாப நோக்கமே நமது சுபாவம், என்று கூறுகிறார்கள்-அதனால் தான் நாம் வெள்ளைக்கார ஏகாதிபத்யத்தை ஆதரித்தோம், பண மூட்டைகளுக்குப் பாராக்குப் பாடினோம், என்று கூறுகிறார்கள்.

சுய இலாபமே நமது நோக்கமானால், இப்போது ஆளவந்தார்களாகி விட்ட இவர்களைப்புகழ்ந்து சாமரம் வீசி, பிழைத்துக்கொள்ள வேண்டும், ஒரு ரேஷன் கடையோ, பஸ் பர்மிட்டோ, பஞ்சாயத்து மெம்பர் பதவியோ, நூல் கோட்டாவோ, ஏதோ ஒன்று கிடைக்கக் கூடும், ஆகவே காங்கிரசுக்குக் கட்டியம் கூறிக் காலந் தள்ளலாம் என்றல்லவா இருந்து விட்டிருப்போம். கொடிகட்டி வாழும் காங்கிரசை எதிர்க்கிறோமே! அதன் நேசம் இலாபம் தரும், அதனிடம் பகைத்துக் கொண்டால், தடியடி கிடைக்கும் என்று தெரிந்தும் எதிர்க்கிறோமே! இலாப நோக்கம் கொண்டவர்களாக நாம் இருந்தால் இப்படி எதிர்த்து இடர்ப்படுவோமா! எத்தி எத்தித் தொழுவோம் யாமே! — என்று பஜனை பாடிப் பலனைப் பெற்றிருக்க முடியாதா! அப்படிப் பெற்றவர்கள் வேறு பலர் இல்லையா? எந்த பொப்பிலிக்கும் பித்தாபுரத்துக்கும் நாம் அடிமைகள் என்று ஏசுகிறார்களோ, அந்த பொப்பிலிகளைச் சேர்த்துக் கொண்ட காங்கிரஸ், நாம் சேருவது என்றால் மறுத்தாவிடும்! மன்னார்

தூற்றல் பலிக்காது; நாம் வளரவே செய்வோம்!

சாமிகளை எல்லாம் சேர்த்துக் கொண்டதே! குல்லாய் போதாது ஐயனே! உள்ளே அழுக்கு இருக்கிறதா கூறு!!—என்று பெருங்கட்டும் அளவுக்கு, காங்கிரசிலே 'காலிமண்டைகள்' சேர்ந்து விட்டன என்றுதானே பொருள். அப்படி இருக்கும்போது நாம் ஏன் சேரவில்லை! இலாபம் நமது நோக்கமாக இருந்தால், அடிமைப்புத்தி நமது சுபாவமாக இருந்தால், இலாப வேட்டைக் காடாக உள்ள காங்கிரசில் அல்லவா சேர்ந்திருப்போம் பாடாவதிப் பல்லவிக்காரர்கள் இதை எண்ணிப் பார்ப்பதில்லை—மக்கள் இதை எண்ணிப் பார்ப்பார்களே என்பது பற்றிய எண்ணமும் அவர்களுக்கு உண்டாவதில்லை!

நாம் யாராக இருந்தாலும் சரி—இந்த நாட்டிலே வாழ உரிமை பெற்றவர்கள்—இந்த நாட்டு நிர்வாகத்துக்காகச் செலவிடப்படும் பணத்திலே ஓர் அளவேனும், வரியாகச் செலுத்துபவர்கள். மக்களாட்சியிலே, ஆட்சி நடைபெற வரிப் பணம் செலுத்தும் யாருக்கும், ஆட்சி எப்படி நடைபெற வேண்டும் என்று கூறும் உரிமையும், ஆட்சியைத் திருத்தவும் மாற்றவும் உரிமை உண்டு. இந்த உரிமை, இந்த உத்தமர்கள் தானமாகத் தருவது அல்ல. மக்களாட்சி தருவது! நாட்டை நிர்வாகம் செய்ய, நமது வரிப்பணமும் தரப்படுகிறது எனவே நாடு எப்படி ஆளப்படவேண்டும் என்று கூறும் உரிமை — மறுக்க முடியாத உரிமை — நமக்கிருப்பது! நாங்களெல்லாம் வெள்ளைக்கார ஏகாதிபத்ய ஏவலர்கள், எனவே நாங்கள் விக்டோரியாராணி தலை பொறித்த நாணயத்தைத்தான் உபயோகிப்போம், என்று நாங்கள் கூறுகிறோமா—கூறமுடியுமா! இப்போது ஏற்பட்டுள்ள ஆட்சிக்கு வரி செலுத்துகிறோம், ஆகவே அந்த ஆட்சி எப்படி எப்படி இருக்க வேண்டும், குறை என்ன குணம் என்ன என்று எடுத்துரைக்கும் உரிமை, எமக்கு உண்டு. அதை உணராத பாடாவதிப் பல்லவியார், பேசுகிறார் இவர்கள் யார் எம்மைக் குறை கூற—என்று. இவர்கள் யாரா? இவர்கள் இந்நாட்டு மக்கள்—இந்நாட்டு ஆட்சி நடைபெற வரிசெலுத்துவோர்கள்—ஆகவே இந்நாட்டு ஆட்சியைப் பற்றிக் கண்டிக்கும் உரிமை படைத்தவர்கள். வரி வசூலிக்காமலா இருக்கிறாய் எம்மிடம்! கொட்டித் தருகிறோமே, அதனால்தான். இந்த ஆட்சியின் போக்கைப்பற்றி எமது கருத்தை எடுத்துரைக்கிறோம். இவர்களெல்லாம் ஏகாதிபத்யத்தை ஆதரித்தவர்கள் என்று, நாங்கள் குறைகூறும்போது மட்டும்தான் தெரிகிறதா — வரி கட்டுகிறோமே அப்போது, யாரிடம் பெறுகிறோம் என்ற நினைப்பு வருவதில்லையோ! வரி வசூலிக்காமல் விலக்களி—ஆட்சி எப்படி ஆனால் என்ன என்று நாங்கள் இருந்துவிடுகிறோம். முடியுமா! இந்த அரசியல் அரிச்சுவடியையும் மறந்து, பள்ளிக்கூடச் சிறார்கள், பந்தடி மைதானத்திலே "டூ" விட்டவனையிற்றே, பலகையை உனக்குத் தருவேனா, என்று பேசுவதுபோல, இவர்கள் ஏகாதிபத்ய ஏவலர்கள் இவர்களா குறை கூறுவது என்று பேசுகின்றனர்.

வேண்டுமானால் வேதனைப்படு, ஏகாதிபத்ய ஏவலர்கள் கூடக் கண்டிக்கும் அளவு, காங்கிரசாட்சியின் அவலட்சணம் இருக்கிறதே என்று! குறை கூறுவோனை, நீ யார்? என்று கேட்கிறாயே— அரசியலா இது?

✲

4-ம் பக்கத் தொடர்ச்சி

அதற்கு—சிறைவாசம். பட்டினி தரும் மந்திரி முன்ஷிக்கு கருப்புக் கொடி காட்டச் சென்றதற்குப் பரிசு—சிறைச்சாலை!

பிப் 1-ந்தேதி, சென்னைக்கு வந்த டில்லி மந்திரி முன்ஷிக்குக் கருப்புக் கொடி பிடித்தோர் — பல்லாயிரக் கணக்கானோர். ஆனால் ஏழு வீரர்களை மட்டும் பிடித்துச் சென்றிருக்கின்றனர், சிறைச்சாலைக்கு.

செல்வக்கண்ணம்மாள், எம். ஆர். பாண்டியன், முத்துச்சாமி முதலானோரையும் பிடித்துச் சென்று, வழக்குப் பதிவு, செய்துகொண்டு விட்டுவிட்டனர்.

கருப்புக்கொடி காட்டச் சென்ற வீரர்கள்மீது வழக்கு – வீரர்கள் அமைதியோடு நடந்து கொள்கிறார்களா என்று கண்காணிக்கச் சென்ற தலைவர்களுக்குச் சிறைவாசம் — வழக்கு!

விசித்திரமான காட்சி! விபரீதம் நிரம்பிய போக்கு!

X X X

சிறையிலே உலவும் நமது, செயல் வீரர்கள், எதையும் தாங்கும் இதயம் கொண்ட மக்களின் மாணிக்கங்கள். அவர்கள் ஆர்வமும் பொதுச் சேவையும், இந்தச் சிறைக் கம்பிகளால் தீ போல வளருமே யொழிய, தணியாது! அணையாது!!

வாழ்விழந்து கிடக்கும் தங்கள் இன விடுதலைக்காகத் தங்களைத் தத்தம் செய்துவிட்ட அம்மாவீரர்களை, எந்த ஆதிக்க வெறியும், எதுவும் செய்துவிட முடியாது. திராவிடக் காளைகள் வெற்றியின் செல்வர்கள்—எதிர்காலத்தின் சிருஷ்டிப் புருடர்கள்!

இதை, வெறிப்பாதையில் வேகமாகச் செல்லும் சர்க்கார் உணர வேண்டும்.

"அமைதியான முறையில், பொதுப்பணி, செய்வது கூட பிடிக்கவில்லையா — இந்த அகிம்சாவாதிகளுக்கு?"—என்று, நாடு கேட்கத் துவங்கிவிட்டது.

இந்தக் குரலொலி — சாதாரணமானதல்ல. இதை உணரவேண்டும் இந்த ஆளவந்தார். வெறிப்பாதை செல்வது, இவர்கள் எதிர்காலத்தைப் 'புலியின் வாய்க்குள்' தள்ளுவது போலாகும். வீழ்ந்த ஜார், மறைந்த லூயி, ஒழிந்த ஹிட்லர், மடிந்த முசோலினி—ஆகிய ஆதிக்க வெறியர்களின் "கதி"—ஏற்படுவது, எளிதல்ல; ஆதிக்கப் பாதை செல்வோருக்கு அது, வெகு விரைவில் கிடைத்துவிடும்.

அந்தப் பாதை — பொல்லாதது.

இதை, இந்த ஆட்சியாளர் உணர்வது, நல்லது நிலைமை மோசமாகுமுன்.

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at DravidaNadu" Press
95, Tirukkachinambi Street Kancheepuram